தேதி.10.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

MCOP. No.67/2021 திரு.பத்மா, க/பெ.ஜெயசந்திரன் ம.சா. 1

<u>ம.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை பொருத்து ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கையின் படி எனது கணவர் ஜெயசந்திரன் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவரும் நானும் சம்பவத்தை கேள்விப்பட்டு சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் காயம்பட்ட எனது மகனை இருவரும் பார்த்தாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் வழங்கிய ம.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.6ல் எனது மகன் அவராக கீழே விழுந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லாரி வந்து தான் எனது மகன் மீது மோதியது. மேற்படி ம.சா.ஆ.6ல் மருத்துவமனையில் எனது மகனுடன் எனது கணவர் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் அளித்த தகவலின் பேரில் தான் ம.சா.ஆ.6ல் எனது மகன் அவராக கீழே விழுந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் லோகேஷ்வரன் விபத்து சமயத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்றதால் தான் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து அவராக கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், ஆனால் நான் எனது மனுவில் TAL 8997 என்ற லாரி மோதியதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த

தேதி 20.12.2020 என்றால் சரிதான். விபத்து நடந்த அடுத்த நாள் தான் எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் மருத்துவமனையில் சம்பவம் பற்றி அவராக கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று தகவல் கொடுத்துவிட்டு மறுநாள் காவல் நிலையத்தில் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்தில் எனது மகன் இறந்ததற்கு 3ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்திடம் இழப்பீடு பெற வேண்டி 1ம் எதிர்மனுதாரர் TAL 8997 லாரியை அதிவேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக எனது கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6ஆனது மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்தில் உடனடியாக தகவல் கொடுக்கப்பட்டும் அதன் பெயரில் மேல்நடவடிக்கை எடுக்காமல் மறுநாள் காலையில் எனது கணவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் லாரி மோதியதாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் TAL 8997 லாரி எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை என்றும், இறந்துபோன எனது மகன் லோகஷ்வரனின் இறப்பிற்கு 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திடம் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் TAL 8997 லாரியை அதிவேகமாக ஓட்டி வந்து எனது மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக பொய்யாக குற்ற வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரும், 2ம் எதிர்மனுதாரர் உரிமையாளரும் எனக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு மனுவிலும்1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரும், 2ம் எதிர்மனுதாரர் உரிமையாளரும் எனக்கு ஆதரவாக

பொய்யான சங்கதிகளை கொண்டு எதிர் வாதம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், மேற்படி குற்ற வழக்கின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மகன் விபத்து சமயத்தில் கனரக வாகனம் ஓட்டி ரூ.40,000/–ம் சம்பாதித்து வந்தார் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் எனது மகனின் வயதை குறைவாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடுத்தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. விபத்து பொருத்து பொய்யான சங்கதிகளைக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட இழப்பீடு மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.